## இயல் 3 - அறநெறிச்சாரம்

**பாடம்: தமிழ்**

**வகுப்பு : 5**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. 'சொல்லாடல்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

அ) சொல் + லாடல்　　ஆ) சொல + ஆடல்

**இ) சொல் + ஆடல்**　　ஈ) சொல்லா + ஆடல்

2 'பொழுதாற்றும்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

அ) பொழு + தாற்றும்　　**ஆ) பொழுது + ஆற்றும்**

இ) பொழு + ஆற்றும்　　ஈ) பொழுது + தூற்றும்

3. வேற்றுமை - இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் ____________

அ) பிரிவு　　ஆ) வேறுபாடு　　இ) பாகுபாடு　　**ஈ) ஒற்றுமை**

### ஆ. இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்களை எடுத்து எழுதுக.

1. தூயவாய் - ஆய
2. வேற்றுமை - சாற்றுங்கால்

### இ. எதிர்ச்சொல் எழுதுக.

1. துன்பம் x இன்பம்
2. வேற்றுமை x ஒற்றுமை
3. மெய்ம்மை x பொய்ம்மை

### ஈ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. நாம் பேசும்போது கடைப்பிடிக்க வேண்டிய பண்பு யாது?**

நாம் பேசும்போது குற்றம் ஏற்படாமல் பேசுவதைக் கடைபிடிக்க வேண்டும்.

**2. மிக உயர்ந்த பண்புகளாக அறநெறிச்சாரம் குறிப்பிடுவதை எழுதுக.**

உயர்ந்த பண்புகள் : குற்றம் ஏற்படாமல் பேசுதல். துன்பங்கள் உண்டான போதும் மனம் தளராமலிருத்தல். தம்மை வெறுப்பவரிடத்தும் வேற்றுமை பாராட்டாத உண்மை நிலை.

### உ. சிந்தனை வினா.

**1. உன் நண்பர் உன்னை விட்டுப் புதிய நண்பர்களுடன் பழகுவதாகக் கருதுகிறாய். இந்நிலையில், அவருக்குச் சிறு துன்பம் ஏற்படுகிது. இப்போது உன் நிலை என்ன?**

1. அவர் என் நண்பர் இல்லை, அவருக்குத் துன்பம் வந்தால் தான் ஏன் கவலைப்பட வேண்டும்?
2. அவருக்குப் பல நண்பர்கள் இருக்கிறார்கள். நான் ஏன் உதவ வேண்டும்?
3. **அவர் என்னை வெறுத்தாலும், அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.**

## உரைநடை - புதுவை வளர்த்த தமிழ்

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.

1. குயில்பாட்டு' நூலை எழுதியவர் யார் ...................

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) வாணிதாசன் ஈ) புதுவை சிவம்

2. 'தமிழுக்கு அமுதென்று பேர்' எனப் பாடியவர் ..........

அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன் இ) கண்ண தாசன் ஈ) பிரபஞ்சன்

3. "பாரதிநாள் இன்றடா, பாட்டிசைத்து ஆட்டா " எனப் பாடியவர் ..........

அ) பாரதிதாசன் ஆ) வாணிதாசன் இ) கண்ணதாசன் ஈ) திருமுருகன்

.4. பாட்டிசைத்து - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............

அ) பாட்டு + இசைத்து ஆ) பாடல் + இசைத்து

இ) பா + இசைத்து ஈ) பாட + இசைத்து

5. மூன்று + தமிழ் - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ..............

அ) மூன்றுதமிழ் ஆ) முத்துத்தமிழ் இ) முதுதமிழ் ஈ) முத்தமிழ்

### ஆ. பொருத்துக

1. பாரதிதாசன் - இருண்ட வீடு
2. தமிழ் ஒளி - மாதவி காவியம்
3. பாரதியார் - பாஞ்சாலி சபதம்
4. வாணிதாசன் - கொடி முல்லை
5. திருமுருகன் - பாவலர் பண்ணை

### இ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. பாரதியார் படைத்த முப்பெருங் காவியங்கள் யாவை?**

1. பாஞ்சாலி சபதம்
2. குயில் பாட்டு
3. கண்ணன் பாட்டு.

**2. பாரதிதாசன் - பெயர்க் காரணம் தருக.**

பாரதிதாசன், பாரதியார் மீது அன்பும், பாசமும், பற்றும் உடையவர். அதனால்தான் கனகசுப்புரத்தினம் என்ற தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றியமைத்துக் கொண்டார்.

**3. பிரபஞ்சனுக்குச் சிறப்பைச் சேர்த்த நூல் எது?**

பிரபஞ்சனுக்குச் சிறப்பைச் சேர்த்த நூல் சாகித்திய அகாதெமி விருது பெற்ற 'வானம் வசப்படும்' என்ற நூல் ஆகும்.

**4. பாவேந்தர் விருதைப் பெற்றவர்கள் யாவர்?**

பாவேந்தர் விருதைப் பெற்றவர்கள் :

1.வாணிதாசன்

2. புதுவை சிவம்.

**5. தமிழ்ஒளியின் படைப்புகளை எழுதுக.**

வீராயி, கவிஞனின் காதல், நிலை பெற்ற சிலை, கவிதைத் தொகுப்புகள், குழந்தைப் பாடல்கள், ஆய்வு நூல்கள், கதைகள், குறுநாவல்கள் முதலியன தமிழ் ஒளியின் படைப்புகளாகும்.

**ஈ. சிந்தனை வினா.**

**1. தமிழின் வளர்ச்சிக்குக் கவிஞர்கள் எவ்வாறெல்லாம் தொண்டாற்றியுள்ளனர்?**

**தமிழ் வளர்ச்சிக்குக் கவிஞர்கள் தொண்டாற்றிய விதம் ;**

- தமிழ்ப்பற்றும் நாட்டுப்பற்றும் மிகுந்த பாரதியார் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று தமது சுதேசமித்திரன் நாளிதழில் எழுதினார். இதன் மூலம் தமிழை மீட்சி பெறச் செய்தார்.
- பாரதிதாசன் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாடினார். தமிழைத் தன் உயிர் என்று பாடினார். இசையமுது, குடும்ப விளக்கு, பாண்டியன் பரிசு போன்ற பல நூல்களை எழுதி தமிழை வளர்த்தார்.
- தமிழில் பெரும்புலமை பெற்ற செய்குத்தம்பி பாவலர் பல அரிய தமிழ் நூல்களை எழுதி தமிழுக்கு வளம் சேர்த்துள்ளார். சீறாப்புராணத்திற்கு உரை எழுதியுள்ளார்.
- அழ. வள்ளியப்பா குழந்தைக் கவிஞர் என்ற பாராட்டுகுரியவர். சென்னை சக்தி பத்திரிகை அலுவலகத்தில் காசாளராகச் சேர்ந்தபோது தம் தமிழ்ப் பணியைத் தொடங்கினார். பிறகு வங்கிப் பணிக்குச் சென்றார். வங்கிப் பணியில் இருந்தாலும் அவருடைய தமிழ்ப்பணியை விடாமல் பலநூல்களை இயற்றித் தமிழுக்குத் தொண்டாற்றினார்.

## துணைப்பாடம் - நன்மையே நலம் தரும்

**அ. வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. பறவைக் குஞ்சுகளை எடுக்க நினைத்த தமிழ்மணிக்குத் தாய்கூறிய அறிவுரை யாது?**

பறவைக் குஞ்சுகளை எடுக்க நினைத்த தமிழ்மணிக்கு, அவனுடைய தாய் "நீ அப்படியெல்லாம் செய்யக்கூடாது. தாயிடமிருந்து பிரித்துவிட்டால், அவை மிகுந்த துன்பமடையும்" என்று அறிவுரை கூறினாள்.

**2. தமிழ்மணியின் பிறந்தநாள் விழாவில், பீட்டர் செய்த செயல் யாது?**

தமிழ்மணியின் பிறந்த நாள் விழாவிற்கு வந்த பீட்டர், அங்கு மரத்தில் இருந்த பறவைக் கூட்டின் மீது கல்லெறிந்தான்.

**3. பீட்டரின் செயலைக் கண்ட தமிழ்மணி என்ன கூறினான்?**

பீட்டரின் செயலைக் கண்ட தமிழ்மணி, "பீட்டர், ஏன் இப்படிச் செய்தாய்? அந்தப் பறவைக் குஞ்சுகள் பாவம் இல்லையா? நீ எறிந்த கல் அந்தச் சின்னஞ்சிறிய பறவைக் குஞ்சுகளின் மேல் பட்டிருந்தால் என்னவாயிருக்கும்? உன் வீட்டை யாராவது இடித்துத்

தள்ளினால், நீயும் உன் குடும்பத்தாரும் என்ன செய்வீர்கள்? அதுபோன்று தானே அந்தப் பறவைகளின் நிலையும். இதை ஏன் நீ புரிந்து கொள்ளவில்லை " என்று கூறினான்.

**4. உயிர்களிடத்து அன்பு காட்டுவது குறித்துத் தமிழ்மணியின் தந்தை என்ன கூறினார்?**

**தமிழ்மணியின் தந்தை கூறியது :**

நம்மைப் போலத்தான் இவ்வுலகில் எல்லா உயிர்களும் வாழ்கின்றன. அவற்றிடம் நாம் அன்பு காட்ட வேண்டும். மற்ற உயிர்களுக்குச் செய்யும் தீங்கு, நமக்கு நேர்ந்தது போன்று உணர வேண்டும். நமக்கு வலித்தால் அவற்றிற்கும் வலிக்கும் அல்லவா" என்று தமிழ்மணியின் தந்தை உயிர்களிடத்து அன்பு காட்டுவது குறித்துக் கூறினார்.

**ஆ. சிந்தனை வினா.**

**1. நீங்கள் செல்லும் வழியில் நாய்குட்டியொன்று நடக்க முடியாமல் துன்பப்ப டுகிறது. அதற்கு நீங்கள் எப்படி உதவுவீர்கள்?**

நான் ஒருநாள் பள்ளியில் இருந்து என் அப்பாவுடன் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தேன். அப்போது சாலையோரத்தில் ஒரு நாய்க்குட்டியொன்று நடக்க முடியாமல் குரைத்துக் கொண்டிருந்தது. பள்ளி மாணவர்களை அழைத்துச் சென்ற மகிழுந்து வேகமாக வந்ததில் நாய்க்குட்டி பயந்து போய் ஓடியதில் அதனுடைய காலில் அடிபட்டுவிட்டது.

நான் என் அப்பாவிடம் அந்த நாய்க்குட்டியை கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லலாம் என்று கூறினேன். அப்பாவும் சரியென்று கூறினார். அந்த நாய்க்குட்டியை மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றோம். அதற்கு ஊசி போட்டு, கொஞ்சம் மாத்திரைகளைக் கொடுத்தார் மருத்துவர்.பின் நாய் குட்டியை வீட்டிற்குத் தூக்கி வந்து அதற்குப் பால் சாதம் கொடுத்தேன். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு மாத்திரையைக் கரைத்துக் கொடுத்தேன். இரண்டு நாட்கள் தொடர்ந்து கொடுத்தேன். அந்த நாய்க்குட்டி பழையபடி நன்றாக நடந்தது. அதற்குப் பிறகுதான் எனக்கு நிம்மதியாக இருந்தது.

## மரபுத்தொடர்கள்

**அ. கீழ்க்காணும் தொடர்களில் ஏற்ற மரபுத்தொடரைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. நாங்கள் வாழையடி வாழையாக உழவுத்தொழில் செய்து வருகிறோம். (விடிவெள்ளியாக/ வாழையடி வாழையாக )
2. அவனுக்கு நடை முறை அறிவு எதுவும்கிடையாது. அவன் ஒரு புத்தகப்பூச்சி (அவசரக்குடுக்கை / புத்தகப்பூச்சி)
3 பாரதிதாசன் கவிதை உலகில் கொடிகட்டிப் பறந்தார்.(பற்றுக்கோடாக/ கொடி கட்டி)

**ஆ. பொருத்துக**

1. கயிறு திரித்தல் - இல்லாததைச் சொல்லல்
2. ஓலை கிழிந்தது - வேலை போய்விட்டது

3. முதலைக் கண்ணீர் - பொய் அழுகை
4. குரங்குப்பிடி - விடாப்பிடி
5. நீர் மேல் எழுத்து - மறைந்து போதல்

**இ. காலை வாரிவிடுகிறது - இம்மரபுத்தொடர், கீழ்க்காணும் எந்தத் தொடருக்குப் பொருத்தமாக அமையும்?**

1. காலம் பொன் போன்றது. இருந்தாலும் நம்மைக் ............
2. காலை எழுந்தவுடன் தூக்கம், நம்மைத் ..............
3. மறதி நம்மை அடிக்கடி ...........
4. இளமைக்காலம் நம்மை அடிக்கடி.

**விடை : 3. மறதி நம்மை அடிக்கடி காலை வாரிவிடுகிறது.**

**ஈ. மலையேறி விட்டது - இம்மரபுத்தொடர் குறிக்கும் பொருளைத் தேர்ந்தெடுக்க.**

1. மாயச் செயல் 2. கதை விடுதல் **3. மாற்றம் பெறுதல்** 4. பயனில்லாது இருத்தல்

**உ. வினாக்களுக்கு விடையளிக்க.**

**1. மரபுத்தொடர் என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டு தருக.**

இணைமொழிகள் போன்று கருத்தாழமும் நடையழகும் கொண்ட தொடர்கள் மரபாக தொன்று தொட்டு வழக்கில் பயன்படுத்தப்பட்டு வருவது மரபுத்தொடர் எனப்படும். எ.கா: கானல் நீர்

**2. பின்வரும் மரபுத்தொடர்களைக் கொண்டு தொடரமைத்து எழுதுக.**

**அ) தோலிருக்கச் சுளை விழுங்கி**

தோலிருக்கச் சுளை விழுங்கியது போல் அத்தனை உப்புக்களையும் கபளீகரம் செய்திருக்கிறது இந்த பேயாறு.

**ஆ) மதில் மேல் பூனை**

கண்ணன் மதில் மேல் பூனை போல் படிப்பில் ஒரு நிலையில்லாமல் இருந்தான்.

## மொழியை ஆள்வோம்

**2. சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. **பொறுமை** - நிலத்தைப் போல் நாம் பொறுமையாக இருக்க வேண்டும்.
2. **நூல்கள்** - நூலகத்தில் பல துறை நூல்கள் பெருகி இருக்கும்.
3. **தமிழ்மொழி** - நம் தமிழ்மொழி மிகவும் தொன்மையானது.
4. **அன்பு** - எல்லோரிடமும் அன்புடன் பழகுதல் வேண்டும்.
5. **கவிஞர்** - இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் பாரதியார் பெரும்புகழ் பெற்றவர்.

**3. பொருத்துக**

1. பாரதியார் - குயில் பாட்டு
2. பாரதிதாசன் - தமிழியக்கம்
3. வாணிதாசன் - கொடி முல்லை

4. திருமுருகன் - என் தமிழ் இயக்கம்
5. பிரபஞ்சன் - வானம் வசப்படும்

**5. பிறமொழிச் சொற்கள் கலவாமல் எழுதுக.**

அழகன், பிரெண்ட்ஸோடு கிரவுண்டுக்குச் சென்றான். அங்கு அனைவருடனும் ஜாலியாகக் கிரிக்கெட் விளையாடினான். அதனால், அவன் மிகவும் டையர்டாக இருந்தான்.

**விடை:**

அழகன், நண்பர்களுடன் திடலுக்குச் சென்றான். அங்கு அனைவருடனும் மகிழ்ச்சியாக மட்டைப்பந்து விளையாடினான். அதனால், அவன் மிகவும் சோர்வாக இருந்தான்.


**6. பாடலை நிறைவு செய்க.**

1. அம்மா இங்கே வந்தாங்க!
அன்பாய் இருக்கச் சொன்னாங்க
நானும் அதைக் கேட்பேன்
அதன் படியே நடப்பேன்
2. அப்பா இங்கே வந்தாங்க!
அடக்கமாய் இருக்கச் சொன்னாங்க
நானும் அதைக் கேட்பேன்
அதன் படியே நடப்பேன்
3. மாமா இங்கே வந்தாங்க
மரியாதையாய் இருக்கச் சொன்னாங்க
நானும் அதைக் கேட்பேன்
அதன் படியே நடப்பேன்
4. பாட்டி இங்கே வந்தாங்க
பண்புடன் இருக்கச் சொன்னாங்க
நானும் அதைக் கேட்பேன்
அதன் படியே நடப்பேன்

**7. பின்வரும் விளம்பரத்தைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

**கபடி விளையாட்டு மன்றம்**

**அனைத்துப் பள்ளி மாணவ, மாணவியருக்கும் ஒரு நற்செய்தி**



இடம்: அண்ணா விளையாட்டு மைதானம், சென்னை.

காலம்: மாணவர் – காலை 9 மணிமுதல் 11 மணிவரை
மாணவியர் – காலை 11 மணிமுதல் 12 மணிவரை

**வினாக்கள் :**

1. நீங்கள் மேலே படித்தது என்ன?

 அ) பாடல் ஆ) கதை **இ) விளம்பரம்**

2. பயிற்சி அளிக்கப்படும் விளையாட்டு எது?

 அ) மட்டைப்பந்து **ஆ) கபடி** இ) சதுரங்கம்

3. மாணவர்களுக்கு எத்தனை மணி நேரம் பயிற்சி வழங்கப்படுகிறது?

 அ) 1 மணி ஆ) 2 மணி **இ) 3 மணி**

4. மைதானம் - இந்தச் சொல்லுக்குரிய பொருள் எது?

 அ) பூங்கா ஆ) அரங்கம் **இ) திடல்**

5. விளம்பரத்திலிருந்து நீங்கள் புரிந்து கொண்டது என்ன?

 **அ) கபடி விளையாட்டுப் பயிற்சி இலவசமாகக் கற்றுத் தரப்படுகிறது.**

 ஆ) கபடி விளையாட்டில் மாணவர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.

 இ) கபடி விளையாட்டு நடைபெறுமிடம் பெரியார் விளையாட்டு மைதானம்.

## மொழியோடு விளையாடு

### 1. குறுக்கெழுத்துப் புதிர்.

**இடமிருந்து வலம்**

1. இவர் எட்டயபுரத்துக் கவிஞர் **பாரதியார்**
2. இது வெண்ணிறப் பறவை. **புறா**
3. தூக்கத்தில் வருவது. **கனவு**

**கீழிருந்து மேல்**

1. புத்தகத்தைக் குறிக்கும் சொல் **நூல்**

**வலமிருந்து இடம்**

1. பாராட்டி வழங்கப்படுவது **விருது**
2. மக்கள் பேசுவதற்கு உதவுவது **மொழி**
3. சுதந்திரத்தைக் குறிக்கும் தமிழ்ச்சொல் **விடுதலை**

**குறுக்கும் நெடுக்குமாக**

1. முத்தமிழுள் ஒன்று: **நாடகம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நா | பா | ர | தி | யா | ர் |
| வ | ட | மி | து | ரு | வி |
| அ | ல் | க | ன | வு | ழா |
| ன் | நூ | கு | ம் | ழி | மொ |
| பு | றா | லை | த | டு | வி |

### 2. குறிப்புகள் கொண்டு விடை எழுதுக.

1. தலைகீழாய் என் வீடு. - தூக்கணாங்குருவி
2. என் பார்வை கூர்நோக்கு. - கழுகு
3. நானும் ஒரு தையல்காரி. - சிட்டுக்குருவி
4. வருமீன் வரும்வரை காத்திருப்பேன். - கொக்கு
5. எனக்கு வீடு கட்டத் தெரியாது. - குயில்

**3. சொல்லிருந்து புதிய சொல்**

1. பாரதியார் - பா, ரதி, யார், பார், பாதி
2. மணிக்கொடி - மணி, கொடி, மடி
3. பாவேந்தர் - பா, வேந்தர், வேர், பார்
4. நாடகம் - நா, நாம், நாகம், கடம்
5. விடுதலை - விடு, தலை, விலை, தடு

**4. சொற்களைக் கொண்டு புதிய தொடர் உருவாக்குக.**

**எ.கா. உண்மை - நாம் எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும்.**

1. **பெருமை** - நாம், பிறர் பெருமைப்படும் செயல்களைச் செய்ய வேண்டும்.
2. **பாடல்** - திருவிழாக்கள் என்றாலே மக்கள் ஆடல் பாடல் என்று மகிழ்ச் சியுடன் இருப்பார்கள்.
3. **நாடகம்** - தொலைக்காட்சியில் வரும் நாடகங்களைப் பார்த்து நேரத்தை வீணாக்கக்கூடாது.
4. **தோட்டம்** - கந்தன் அவன் வீட்டில் மாடித் தோட்டம் அமைத்துள்ளான்.
5. **பரிசு** - கோகிலா பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்றாள்.

**5. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடரமைக்க.**

1. பெருமை பாரதிதாசன் தமிழுக்குச் சேர்த்துள்ளார்.

   பாரதிதாசன் தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

2. பறவை அழகான புறா

   புறா அழகான பறவை.

3. தமிழ் உண்டாகிறது மேல் ஆர்வம்.

   தமிழ் மேல் ஆர்வம் உண்டாகிறது.

4. போற்றும் உலகம் எழுத்தாளர் உயர்ந்த

   உலகம் போற்றும் உயர்ந்த எழுத்தாளர்.